செய்தி வெளியீடு எண். 360 நாள். 7.7.2009

## செய்தி வெளியீடு–7.7.2009

# எண்ணூருக்கு அருகில் 800 கோடி ரூபாய் முதலீட்டில் 1000 மெகாவாட் வரை திறன் கொண்ட ஸ்டீம் டர்பைன்கள், ஜெனரேட்டர்கள் தயாரிக்கும் புதிய தொழிற்சாலை!

# முதலமைச்சர் கலைஞர் முன்னிலையில் ஜப்பான்–இந்தியா கூட்டுமுயற்சி நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்து !

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த டொஷிபா கார்ப்பரேஷன் நிறுவனம் நாற்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் 1 இலட்சத்து 50 ஆயிரம் மெகாவாட் உற்பத்தித் திறன் கொண்ட 1800க்கும் மேற்பட்ட ஸ்டீம் டர்பைன்கள் மற்றும் ஜெனரேட்டர் பிரிவுகளை நிறுவி, உலக அளவில் தலைசிறந்த நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. அதேபோல குறைந்த செலவில் உருக்கு தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்றாகிய இந்தியாவைச் சேர்ந்த ஜே.எஸ்.டபிள்யூ ஸ்டீல் நிறுவனம் சுரங்கம், கார்பன் உருக்கு, மின்சாரம், போன்ற பல்வகைத் தொழில்களில் ஈடுபட்டு, தற்போது 490 மெகாவாட் மின்உற்பத்தி செய்வதுடன், 3400 மெகாவாட்டிற்கும் மேலான மின் உற்பத்தித்திறன் கொண்ட திட்டங்களையும் அமைத்து வருகிறது,

மிகுந்த செயல்திறம் கொண்ட சூப்பர் கிரிடிக்கல் அனல் மின் நிலையங்களில் அமைக்கப்படுகின்ற, 1000 மெகாவாட் வரை திறன் அளிக்கக்கூடிய ஸ்டீம் டர்பைன்களையும், ஜெனரேட்டர்களையும் தயாரிப்பதற்காக, டொஷிபா மற்றும் ஜே.எஸ்.டபிள்யூ நிறுவனங்கள் இணைந்து "டொஷிபா ஜே.எஸ்.டபிள்யூ டர்பைன் மற்றும் ஜெனரேட்டர் பிரைவேட் லிமிடெட்" என்ற கூட்டு முயற்சி நிறுவனத்தை உருவாக்கியுள்ளன. இத்திட்டத்தை நிறுவுவதற்காகப் பல்வேறு மாநிலங்களுக்கும் சென்று இடங்களைத் தேர்வு செய்த டொஷிபா ஜே.எஸ்.டபிள்யூ டர்பைன் மற்றும் ஜெனரேட்டர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் தமிழகத்தில் முதலீடுகள் செய்வதற்கு உகந்த சூழ்நிலைகள் நிலவுவதையும், இதர உள்கட்டமைப்பு வசதிகள் நிறைந்துள்ளதையும் கருதி சென்னை எண்ணூருக்கு அருகில் இத்தொழிற்சாலையை அமைத்திட முடிவு செய்துள்ளது.

ஏறத்தாழ 800 கோடி ரூபாய் முதலீட்டில், 500 பேருக்கு நேரடியாக வேலை வாய்ப்புகளை அளிக்கும் இத்தொழிற்சாலையை அமைப்பதற்கான புரிந்துணர்வு

ஒப்பந்தம் மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மற்றும் மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் ஆகியோர் முன்னிலையில் இன்று (7.7.2009) நடைபெற்றது.

தமிழக அரசின் சார்பில், தொழில் துறை முதன்மைச் செயலாளர் திரு.எம்.எப். பாருகி, இ.ஆ.ப., டொஷிபா ஜே.எஸ்.டபிள்யூ டர்பைன் மற்றும் ஜெனரேட்டர் பிரைவேட் லிமிடெட் நிறுவனம் சார்பாக அந்நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. இடாரு இஷிபாஷி ஆகியோர் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

இந்நிகழ்வின்போது, ஜப்பான் நாட்டுத் தூதுவர் திரு. காசோ மினகாவா, பன்னாட்டுக் கூட்டுறவுக்கான ஜப்பான் நாட்டு வங்கியின் தலைமைப் பிரதிநிதி திரு.ஹிரோஷி குரிஹரா, ஜப்பான் நாட்டு டொஷிபா கார்ப்பரேஷன் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ஹிரோஷி ஹிராபயாஷி, பவர் சிஸ்டம் நிறுவனத்தின் தலைவர் மற்றும் முதன்மைச் செயல் அலுவலர் திரு. யாசுஹாரு இகராஷி, செயல் துணைத் தலைவரான திரு. அட்சுஹிகோ இசுமி, துணை வல்லுநர் திரு. யோச்சி காடோ, டொஷிபா இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. யூசோ காடோ, ஜே.எஸ்.டபிள்யூ மின்சார நிறுவனத்தின் துணை மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் திரு. எஸ்.எஸ். ராவ், முதுநிலை துணைத் தலைவர் திரு. வி.கே. தனுகா ஆகியோரும்;

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறை முதன்மைச் செயலாளர் திரு. கு. ஞானதேசிகன், இ.ஆ.ப, சிப்காட் நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் டாக்டர் என். கோவிந்தன், இ.ஆ.ப., டிட்கோ நிறுவனத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி அனிதா ப்ரவீன். இ.ஆ.ப., ஆகியோரும் உடனிருந்தனர்.

* * *

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9